**Universitäres Notfallzentrum**
Direktor und Chefarzt
Prof. Dr. med. Aristomenis Exadaktylos

# இணையத்தளப் பக்கத்துக்கான வசனங்கள்

அன்பான பெண்நோயாளிகளே, அன்பான ஆண்நோயாளிகளே

பல்கலைக்கழக அவசரசேவை நடுநிலையமான Inselspital என்ற வைத்தியசாலை உங்களுக்காக வருடம் 365 நாட்களும் மருத்துவம் செய்யத் தயாராக இருக்கிறது.

எமது மிகஅனுபவம் பெற்ற அவசரஉதவிவைத்தியர்களும் சிறந்தபயிற்சிபெற்ற பராமரிப்பாளர்களும் ஒன்று சோந்து வருடத்துக்கு 38´000 நோயாளிகளுக்கு வைத்தியம் செய்கின்றனர். எம்மிடம் வரும் நோயளிகளுக்கான கடுமையான நோய்களையும், உயிருக்கு ஆபத்துவரும் நோய்களையும் மற்றும் சாதாரண நோய்களையும் காயங்களையும் சுகப்படுத்தி அனுப்புகிறோம். அதிசிறந்த நுட்பமான கருவிகளுடன் திறமைபெற்ற வைத்திய நிபணர்களும் சேர்ந்து உங்கள் நோய்க்கு என்ன வைத்தியம் செய்தால் குணமாகும் எனஎடைபோட்டு அதிஉயர்ந்த தராதரத்தில் மரத்துவம் செய்யப்படும்.

**பதிவுகளைச்செய்தலும் நோயின் ஆபத்தான நிலையைக்கண்டுகொள்ளலும்** (Triage)
எமது அநேகமான நோயாளிகள் தாமாக தமது சொந்த விருப்பப்படியே பல்கலைக்கழக அவசரசேவை நடுநிலையத்துக்கு வருகின்றனர். சிலர் தமது கவுஸ் டாக்டரின் ஆலோசனையின்படி அல்லது நிபுணத்துவம் பெற்ற சிறந்தவைத்தியரால் மற்றும் வேறைய வைத்தியசாலைகளாலும் அனுப்பப்படுகின்றனர். நீங்கள் வந்தவுடன் பராமரிப்புத் தாதிகள் உங்கள் நோயின் நிலையை எடைபோட்டு (Triage) கொள்வர். எம்மிடம் வரும் நோயாளிகள் யாவரும் அவைக்கான அவசர நிலையைப் பொறுத்தே முக்கியத்துவம் கொடுத்து வைத்தியம் செய்யப்படும். இதனால் சிலநாட்களில் அல்லது நோயாளிகளின் எண்ணிக்கையயைப் பொறுத்து காத்திருக்க வேண்டிய நிலை வரும் என்பது எமக்குத் தெரியும். நீங்கள் பொறுமையாகக் காத்திருப்பதற்கு நாம் நன்றி கூறுகிறோம்.

உங்கள் நோயின் நிலைப்பாட்டை வைத்து எந்தப்பகுதியில் வைத்து வைத்தியம் செய்வதெனத் தீர்மானித்த பின்னர், அவசரசேவை நடுநிலைய அலுவலகப் பொறுப்பாளர்கள் உங்களுடன் அல்லது உங்களின் இனத்தவரிடம் இருந்து உங்களின் பெயர் விபரங்களை எழுதிக் கொள்வர்.

அதற்காக தயவசெய்து பின்வரும் பத்திரங்களைக் கொண்டு வரவும்:

1) Krankenkasse தந்த காப்புறுதிஅடையாளஅட்டை மற்றும் விபத்துக்காப்புறுதிஅட்டை
2) பாவிக்கும் மருந்துகள் பற்றிய பட்டியல் வைத்தியம்பற்றிய விபரங்கள்
3) தெலைபேசி இலக்கங்கள் அல்லது தேவையான விபரங்கள், முக்கியபத்திரங்கள் போன்ற இங்கே தங்கி நிற்கும் காலத்தில் தேவைப்படக்கூடியவற்றைக் கொண்டு வரவம்.

**முக்கிய அறிவித்தல்:**
தயவுசெய்து பரிசோதனைசெய்வதற்குமுன் நீர்அருந்தாமலும், உணவுஉண்ணாமலும் புகைத்தல்செய்யாமலும் இருக்கவும்.

**காத்திருக்கும் நேரம்**
அவசரசேவையின் வைத்தியக்குழு தம்மிடம் வரும் தமது நோயளிகளை அவர்களின் நோயின் ஆபத்துநியையை வைத்தே முக்கியத்துவம் கொடுத்து வைத்தியம் செய்வார்கள். மிகவும் ஆபத்தான நோய்வாய்பட்டவர்களும் உயிருக்குஆபத்து வரக்கூடிய நிலையிலுள்ளவாகளும் நல்லாகக்காயப்பட்டவர்களுக்கும் அவசர மருத்துவ உதவி முதலில் தேவைப்படும். இப்படியானவர்களின் காயத்தின் பாதிப்புக்களாலும் வைத்தியத்திற்குவரும் நோயாளிகளின் தொகையாலும் சில கிழமைநாட்களையும் பொறுத்து நீங்கள் காத்திருக்க வேண்டிவரும். நாம் நோயாளருக்கும் அவாகளின் இனத்தவர்க்கும் எவ்வளவு நேரம் கிட்டத்தட்ட காத்திருக்க வேண்டும் என அறிவிப்போம்.

நோயாளிக்கு என்ன வருத்தம் என்று கண்டபின்னர் காத்திருக்கும் அறைக்குள்வைத்து நோயாளியின் நிலைப்பாடுபற்றி இடையிடையே அவதானித்து மாற்றங்கள் காணப்பட்டால் உடனே வைத்தியம் செய்யப்படும்.

**உடனே வருதலும் சுலபமானநோயுள்ளவரின் அவசரநிலை மரத்துவஅறையும்**

சுலபமான நோயுடன்வரும் எமது நோயாளிகளை நாம் எம்மிடமுள்ள அவசரநிலை மருத்துவ அறையில் வைத்து வைத்தியம் செய்வோம். நோயாளிகள் தமது சுகயினத்துக்கு மருத்துவம் தேவை எனக்கருதி தமது எல்லாவிடயத்துக்கும் பொறுப்பான டாக்டருடன் தொடர்பு கொள்ளமுடியாவிடின் அல்லது தமக்கு அப்படி ஒரு வைத்தியர் இதுவரை இல்லாதவர்கள் எம்மிடம் வந்து மருத்துவம் பெற்றுக் கொண்டு அன்றே வீடுசெல்லலாம். மிகஅனுபவம் பெற்ற உள்நோய்களுக்கான விசேட வைத்தியர்களும் மற்றும் எல்லா நோய்களுக்கென கற்றுக்கொண்ட பொதுவைத்தியர்களும் மற்றும் அவர்களுக்கு ஆதரவாகசேவையில் இருக்கும் அவசரநிலையில் பராமரிப்புசெய்யவென கற்றுக்கொண்ட தாதியர்களும் சேர்ந்து வரும் வயதுக்குவந்த நோயாளிகளின் அவசரநிலைக்கு மருத்துவம் செய்துகொள்வர். தேவைப்படின் அவசரசேவைநடுநிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

பூட்டப்பட்ட நேரங்களில், அதாவது தோல்மருத்துவம் மற்றும் தொற்றுநோய் வைத்தியப்பகுதி பூட்டப்பட்டால்(17:00 – 20:00 மணி, வாரக்கடைசிநாட்கள்), அவசரசேவை வைத்தியர்கள் எல்லாநோயைப்பற்றிப் பரிசோதித்து அத்துடன் எயிட்ஸ் எனும் HIV நோய் இருக்கிறதா என்றும் பாலியல் தொடர்பகளில்தொற்றக்கூடிய நோய்கள் உள்ளதா என்றும் ஆண்களிடம் சோதிக்கப்படும். கண்நோய்க்கான அவசரநிலைவந்தால் 17:00 இருந்து 8:00 மணிவரை வாரக்கடைசிநாட்களிலும் லீவுநாட்களிலும் அவசரநடுநிடையத்தில் பதிவுசெய்யலாம். நோயின் குணத்தை அறிந்து ஒன்றில் உடனே வைத்தியம் செய்யப்படும் அல்லது கண்ணுக்குப் பொறுப்பான வைத்தியரிடம் அனுப்பி வைக்கப்படும்.

**இனத்தவர்களும் அழைத்துவருபவர்களும்**

வைத்தியநிலை ஒத்துவருமாக இருந்தால் இனத்தவர்களும் அழைத்துவருபவர்களும் வைத்தியம் செய்யும் போது அருகே நிற்கலாம். எமது அனுபவத்தின்படி நோயாளிக்குப் பிடித்தவாகள் அருகே நின்றால் அது அவர்களுக்கு மிகவும் தென்பாக இருக்கும் என்பதே. வைத்தியத்துக்கான முக்கியமுடிவுகள் எடுக்கும் போது எமது வைத்தியர்கள் நோயாளியின் சம்மதத்துடன் சேர்ந்துவருபவர்களிடம் அவர்களின் அபிப்பிராயத்தையும் கேட்டுக்கொள்வார்கள்.

**உணவுஉண்ணும்வசதிகள்:**

நோயாளிகள் தயவுசெய்து பராமரிப்புத்தாதிமார்களிடம் நீங்கள் உணவு உண்ணலாமா என்பதை கேட்டறிந்து கொள்ளுங்கள். சிலவேளையில் சத்திரசிகிச்சை அல்லது வேறுவித சோதனைகள் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தால், நீங்கள் கட்டாயம் உணவுஉண்ணாமல் இருக்க வேண்டும். ஒவ்வொருமாடியிலும் சான்விச்சும் குடிவகைப் பொருட்களையும் கொண்டுள்ள இயந்திரங்கள் காணப்படுகின்றன. அத்துடன் ஏழு உணவகங்கள் இந்த Insel- சுற்றாடலில் உண்டு.

**புகைத்தல்த்தடை**

சுகாதாரத்தைகபப்பாற்றிக் கொடுக்கும் வைத்தியசாலை ஆகிய எமது இடத்தில் „புகைத்தல் நிலையம்“ அல்லது புகைத்தல் அறைகள் கிடையாது. இதை புரிந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டப்படுகிறீர்கள்.

**தொடர்புகளும் இங்கு வருதலும்**

| | | |
|---|---|---|
| அவசரதேவைக்கான தெலைபேசிஇல: | +41 31 632 24 02 | (24மணித்தியாலமும்/365 நாட்களும்) |
| தொலைநகல்: | +41 31 632 24 50 | |
| மின்அஞ்சல்: | notfallzentrum@insel.ch | (திங்-வெள் 8:00–12:00/13:00–17:00) |
| அவசரசேவைநிலையம் | +41 31 632 34 14 | திங்-வெள் 10:00–20:00 மணிவரை<br>சனி-ஞாயி லீவுநாட்கள் 9:00-20:00 மணிவரை |

**போக்குவரத்துச்சபைமூலம் வருதல்**

பேரூந்து இல.11 தொடருந்துநிலையம் போ்ணில் இருந்து Güterbahnhof பக்கமாகசென்று தரிப்புநிலையம் „Inselspital“ வரை

பேரூந்து இல.17 Köniz- Weiermatt பக்கமாகசென்று தரிப்புநிலையம் „Kaufm. Verband“ வரை

டிறாம் இல. 7 Bern- Bümpliz பக்கமாகசென்று தரிப்புநிலையம் „Kaufm. Verband“ வரை

டிறாம் இல. 8 Bern- Brünnen பக்கமாகசென்று தரிப்புநிலையம் „Kaufm. Verband“ வரை

Postauto Line 101, தரிப்புநிலையம் „Inselspital“ வரை

**மோட்டார்வண்டியில் வருபவர்கள்**

நெடுஞ்சாலை A1ல் வரவும்: தயவுசெய்து வெளியேறும்வழியான „Forsthaus“ எடுத்து பின் „Inselspital“ மற்றும் „Inselparking“ என்ற குறிப்புக்களைப் பின் தொடாந்து வரவும்.

Inselspital சுற்றவுள்ள காணிக்குள் நீண்டநேரம் தரித்துநிற்கும் மோட்டார்வண்டித்தரிப்பு நிலையம் இல்லை.

**நோயாளிகளைக் கொண்டுவருதலும் பின் அழைத்துச் செல்லலும்**

அவசரசேவைநிலையத்துக்கு முன்னால் ஓர் குறிப்பிட்டளவு குறைந்த தொகையில் மட்டும் வாகனத்தரிப்பு நிலையங்கள் உள்ளன. அவசரசேவைநிலையத்துக்கு முன்னால் நீங்கள் குறுகியநேரம் மட்டுமே தங்கிநிற்க முடியும். தயவுசெய்து குறுகியநேரம் தரித்து நிற்பதற்கான பத்திரத்தைப் பெற்று வெளியே நல்லாகத் தெரியக்கூடியதாக வைக்கவும். தயவுசெய்து முடிந்தளவில் Inselparkingல் உள்ள வாகனத்தரிப்பு நிலையங்களில் வாகனத்தை நிற்பாட்டி வைக்கவும்.